DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.முனியாண்டி | Father/Husband Name : சண்முகவேல் |
| Age : 69 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : கிராம உதவியாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Dec 26, 2025 3:03 PM

(Accused not Present. Petition under Section 317 CrPC filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் சாத்தூர் தாலுகா படந்தால் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சாத்தூரில் குடியிருந்து வருகிறேன்.

2. கடந்த 15.03.2014 ம் தேதி அதிகாலை சுமார் 03.30 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ரவிசந்திரன் ஆகியோர் என்னை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வர கூறினார்கள். நானும் அங்கு சென்ற பின்னர் நான், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் இரண்டு போலீசார் படந்தால் பள்ளி அருகே சென்று எங்களுடைய வாகனங்களை அங்கேய நிறுத்திவிட்டு ஆற்றுக்குள் நடந்து சென்றோம். அன்றைய தினம் எங்களுடைய கிராம நிர்வாக அலுவலர் விடுப்பில் இருந்ததால் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலர் வந்திருந்தார். நாங்கள் ஆற்றுக்குள் சென்று பார்த்துவிட்டு வெளியே வந்து எங்களுடைய வாகனங்களை எடுத்துக்கொண்டு ரெங்கப்பநாயக்கன்பட்டிக்கு செல்லக்கூடிய வழியில் சென்றுகொண்டிருந்தபோது அங்குள்ள அனுமான் நகர் அருகே நாங்கள் வந்துகொண்டிருந்தபோது வாகனத்தின் வெளிச்சம் தெரிந்தது. எனவே, நாங்கள் எங்களுடைய வாகனங்களை அனுமான் நகர் அருகே நிறுத்திவிட்டு நின்றுகொண்டிருந்தபோது லாரி வந்தது. அந்த லாரியை நிறுத்தியபோது அந்த லாரியில் MMM என்று எழுதப்பட்டிருந்தது, அந்த லாரியின் பதிவெண் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த லாரியில் சுமார் 1 1/2 யூனிட் அளவுள்ள ஆற்று மணல் இருந்தது. அந்த மணலுக்கான அனுமதி சீட்டு இருக்கிறதா என்று வருவாய் ஆய்வாளர் அந்த லாரியை ஓட்டி வந்த நபரிடம் கேட்டார். அவர் அனுமதி சீட்டு இல்லை என்று கூறிவிட்டார்.

3. லாரியை ஓட்டி வந்த நபரின் பெயர் முனியாண்டி ஆகும். நான் என்னுடைய இருசக்கர வாகனத்தை எங்களுடன் வந்த கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்துவிட்டு அந்த லாரியில் ஏறி லாரியை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம். லாரியை அதை ஓட்டி வந்தவரே ஓட்டினார். வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வளார் மற்றும் போலீசார் வந்துவிட்டார்கள். அவர்கள் லாரியில் இருந்த மணல் தொடர்பாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது விடிந்துவிட்டது. நான் என்னுடைய வாகனத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

4. போலீசார் என்னை இந்த வழக்கில் விசாரித்தார்களா என்றால் வாகனத்தை

வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டு வந்த பிறகு அங்கு வைத்து விசாரித்தார்கள். எனக்கு எத்தனை மணிக்கு போன் செய்தார்கள் என்றால் அதிகாலை 03.30 மணிக்கு வருவாய் ஆய்வாளர் போன் செய்தார். ஆற்றுக்குள் மணல் அள்ளப்படுகிறதா என்பதை நாங்கள் ஆற்றுக்குள் சென்று பார்க்கவில்லை என்றால் நாங்கள் ஆட்சிக்குள் சென்றபோது யாரும் அங்கு மணல் அள்ளவில்லை. 1 ½ யூனிட் மணலை லாரியில் ஏற்றுவதற்கு சுமார் எவ்வளவு நேரம் ஆகும் என்றால் ஒரு மணி நேரம் ஆகலாம்.

5. அனுமான் நகரில் வைத்து எதிரியை போலீசார் விசாரித்தார்களா என்றால் வருவாய் ஆய்வாளர் தான் மணலுக்கு சீட்டு இருக்கிறதா என்று விசாரித்துக் கொண்டிருந்தார். லாரியில் 1 ½ யூனிட் மணல் இருந்ததாக யார் லாரி மீது ஏறி பார்த்தார் என்றால் நான் தான் பார்த்தேன். நான் லாரிகள் பார்த்தபோது மணல் லாரி முழுவதும் இருந்ததால் குறைவாக இருந்ததா என்றால் லாரி முழுவதும் இருந்தது ஆனால் அதன் அளவு எனக்கு தெரியாது. லாரியில் 3 யூனிட் அளவிற்கு மணல் அள்ள முடியும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. முனியாண்டி என்ற நபரை நான் வழக்கு சம்பவத்திற்கு பிறகு பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த போது வருவாய் ஆய்வாளர் எனக்கு அதிகாலை மூன்று முப்பது மணிக்கு போன் செய்து வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வர சொன்னதாக கூறினேனா என்றால் கூறினேன். நாங்கள் ஆற்றுக்குள் சென்று விட்டு வந்து எங்களுடைய வாகனங்களை எடுத்துக் கொண்டு ரெங்கப்பன் நாயக்கன்பட்டி வழியாக சென்றோம் என்ற விபரத்தை போலீசார் என்னை விசாரித்த போது கூறினேனா என்றால் கூறினேன். வட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கினார்களா என்றால் இல்லை.

7. நாங்கள் ரோந்துக்கு சென்றதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், லாரியில் மணல் எதுவும் கிடையாது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் புகார் கொடுத்தது வருவாய் ஆய்வாளர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dec 26, 2025 3:18 PM

Judicial Magistrate 2, Sattur